## 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டம்:

# மாதவரம் - சோழிங்கநல்லூர் வழித்தடங்களுக்கு விரைவில் டெண்டர்

## அதிகாரிகள் தகவல்




சென்னை, ஜூலை.27-

2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்திற்காக மாதவரம்-சோழிங்கநல்லூர் வழித்தடத்துக்கு விரைவில் டெண்டர் கோரப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### மெட்ரோ ரெயில் திட்டம்

சென்னையில் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் கட்டத்தில், வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலான முதலாவது வழித்தடத்திலும் (23.1 கி.மீ. தூரம்), சென்னை சென்டிரலில் இருந்து புனித தோமையார் மலை வரையிலான 2-வது வழித்தடத்திலும் (22 கி.மீ. தூரம்) தற்போது மெட்ரோ ரெயில் சேவை இயக்கப்பட்டு வருகிறது.

முதலாவது வழித்தடத்தில் வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை விரிவாக்க பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

### மாதவரம்-கோயம்பேடு

மெட்ரோ ரெயில் திட்டத்தை 2-வது கட்டமாக 118.9 கி.மீ. தூரத்துக்கு மொத்தம் 3 வழித்தடங்களில் தமிழக அரசு செயல்படுத்த உள்ளது. அதன்படி, மாதவரம் முதல் சிப்காட் வரை (பழைய மகாபலிபுரம் சாலையையொட்டி சிறுசேரி) 45.8 கி.மீ. தூரத்துக்கு மூலக்கடை, பெரம்பூர், அயனாவரம், கெல்லீஸ், கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி, நுங்கம்பாக்கம், ஆயிரம்விளக்கு, மயிலாப்பூர், அடையாறு, பெருங்குடி, துரைப்பாக்கம் வழியாக 3-வது வழித்தடமும், கலங்கரை விளக்கம் முதல் கோயம்பேடு (பூந்தமல்லி புறவழிச்சாலை வரை) 26.1 கி.மீ. தூரத்துக்கு ஆழ்வார்பேட்டை, நந்தனம், பனகல் பூங்கா, கோடம்பாக்கம், வடபழனி (ஆற்காடு சாலை), சாலிகிராமம் வழியாக 4-வது வழித்தடமும் அமைக்கப்பட உள்ளது.

இதேபோல மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை 47 கி.மீ. தூரத்துக்கு ரெட்டேரி, கொளத்தூர், வில்லிவாக்கம், கோயம்பேடு, நெற்குன்றம், ஆழ்வார்திருநகர், ராமாபுரம், ஆலந்தூர், புனித தோமையார் மலை, கீழ்கட்டளை, மேடவாக்கம், பெரும்பாக்கம் வழியாக 5-வது வழித்தடமும் அமைக்கப்பட உள்ளது. 118.9 கி.மீ. தூரத்துக்கு செயல்படுத்தப்பட உள்ள 2-ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்து விட்டது.

### பணிகள் எப்போது தொடங்கும்?

இந்த நிலையில் 3-வது வழித்தடத்தில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67 கி.மீ. தூரம்), 5-வது வழித்தடத்தில் மாதவரம் முதல் கோயம்பேடு வரையிலும் (16.34 கி.மீ. தூரம்) என மொத்தம் 52.01 கி.மீ. தூரத்திலான திட்டத்துக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (ஜைக்கா) கடன் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளது. இதையடுத்து இந்த வழித்தடத்துக்கான வடிவமைப்பு பணிகள் தற்போது நடந்து வருகிறது.

வடிவமைப்பு பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், 52.01 கி.மீ. தூரம் உள்ள 3-வது மற்றும் 5-வது வழித்தடத்துக்கு விரைவில் டெண்டர் கோரப்பட உள்ளதாக மெட்ரோ ரெயில் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதையடுத்து டெண்டர் இறுதி செய்யப்பட்டு மாதவரம்-சோழிங்கநல்லூர் மற்றும் மாதவரம்-கோயம்பேடு வழித்தடத்தில் விரைவில் பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.